**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். CC 52/2023**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சரவணக்குமார் | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | சொக்கலிங்கம் | **தொழில்:** | விவசாயம் |
| **கிராமம்:** | குருந்திராக்கோட்டை | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | அறந்தாங்கி | **வயது:** | 55/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of oaths Act, 1969 (Act 44 of 1969)**

<u>09.05.2025</u>
**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் இம்மனுவில் மனுதாரராவேன். நான் எதிரி மீது மதிப்பு மறுக்கப்பட்ட காசோலையின் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என் தரப்பில் **ம.சா.ஆ.1 முதல் 3** வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறேன்.

1) 04.04.2022 ஆம் தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி கொடுத்த Karur Vysya Bank, அறந்தாங்கி கிளையின் காசோலை அசல் (காசோலை எண்.000102) **ம.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2) மேற்படி காசோலையை கடந்த 08.04.2022 ஆம் தேதியன்று இந்தியன் வங்கி, அறந்தாங்கி கிளையின் வசூலுக்காக தாக்கல் செய்து அது 11.04.2022 ஆம் தேதி திருப்பப்பட்டதற்கான அசல் சலான் **ம.சா.ஆ–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3) புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் மேற்படி காசோலை 22.04.2022 ஆம் தேதியில் எதிரியின் முகவரிக்கு புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் **ம.சா.ஆ–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்று எனக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்க வேண்டுகிறேன்.

**எதிரிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**